ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2141/24 - 2019 සැප්තැම්බර් මස 18 වැනි බදාදා - 2019.09.18
*2141/24 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலா சட்டம்

*சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் எந்தெனி இமெனுவெல் அமரதுங்க ஆகிய நான், 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலா சட்டத்தின் 70 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களைப் பிரயோகித்து, இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால், சுற்றுலா சார்ந்த அபிவிருத்திப் பணிகளின் நிமித்தம் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியை எடுப்பதற்கு தேவை என்பதால், காணி எடுத்தற் சட்டத்தின் 49 (அ) பிரிவுக்கு இணங்க, அந்தக் காணியை எடுப்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

ஜோன் எந்தெனி இமெனுவெல் அமரதுங்க,
சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும்
கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2019, செத்தெம்பர் 18.*

**அட்டவணை**

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு - தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவின், நகுலேஸ்வரம் எனும் (J/226) கிராம அலுவலர் பிரிவின் நகுலேஸ்வரம் என்ற கிராமத்தில் அமைந்துள்ள, 29 ஏக்கர், 3 றூட், 20 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள Ya/TLL/2019/47 ஆம் இலக்க, 2019.09.02 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் இலக்க A, B, C, D, E, F எனும் 6 காணித்துண்டுகளின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : கடல்;

கிழக்கு : புன்னன்புதுக்காடு, அல்வன்மலையடி, பத்திரயன் புதுக்காடு, வேலர்க்காடு, சோலசிங்க சேனாதிராஜன் புதுக்காடு மற்றும் உரிமையாளர் அறியப்படாத காணி;

தெற்கு : பிரதான வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை);

மேற்கு : செல்வநாயகம் செந்தில்நாதன் மற்றும் சாந்தலக்ஷிமி அபிமான்யசிங்கம் என்பவர்களால் உரிமை கோரப்படும் வலக்காடு அல்வன்மலையடி அல்லது அல்வன்மலையடியும் வலக்காடும்.